# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 138/2015

Prosecution Witness 3

| | | | |
|---|---|---|---|
| Name | : நூர்ஜஹான் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.கமாலுதீன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2024.

(Accused 1 - 5 absent. Petition u/s. 317 Crpc filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது போத்தனூரில் குடியிருக்கிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அசா 1 என் மகள் ஆவார். அசா 2 என் கணவர் ஆவார். 1ம் எதிரி அசா 1ன் கணவர் ஆவார். 2ம் எதிரி ஹனிபா தன் மகன் 1ம் எதிரிக்காக என் மகளாக அசா 1ஐ பெண் கேட்டார். அதற்கு எங்கள் குடும்பத்தார் மறுத்துவிட்டோம். மதுரையில் ஒரு மணமகனை பார்த்து பேசி திருமணத்திற்காக முடிவு செய்தோம். ஆனால் அந்த மணமகனை பற்றி குறைகளை கேட்டறிந்து மேற்படி திருமணத்தை நிறுத்திவிட்டோம். அதன்பிறகு மேற்படி தகவலை கேட்டறிந்து எதிரி குடும்பத்தார் என் மகளை பெண் கேட்டார்கள். வரதட்சனை எதுவும் வேண்டாம் என்று கூறினார்கள்.

2. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக அக்டோபர் மாதம் 7ம் நாள் அசா 1 என் மகளுக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போதும் திருமணத்திற்கு முன்பும் மாப்பிள்ளை வீட்டார் பிரச்சனை செய்தார்கள். திருமணத்திற்கு பின்னிட்டு அசா 1ம் 1ம் எதிரியும் பொள்ளாச்சியில் வசித்து வந்தார்கள். 1ம் எதிரி அப்போது வெளியூரில் வேலை பார்த்து வந்தார். எனது மகளை அவரது வீட்டில் விட்டுவிட்டு வாரத்திற்கு ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை வந்து பார்ப்பார்.

3. 1ம் எதிரி அசா 1ஐ பார்த்து என்னுடைய அக்கா மற்றும் மச்சான் கூறுவதுபோல் நடக்கவேண்டும் என்று கூறினார். 1ம் எதிரியின் சகோதரி மற்றும் அவரது மைத்துனர் என்னுடைய மகளை வாழ விடவில்லை. என் மகளை பார்க்க என்னையும் என் கணவரையும் அனுமதிக்கவில்லை. நாங்கள் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை.

4. பொள்ளாச்சி ஜமாத்தை அணுகி இது பற்றி அவர்களிடம் தெரிவித்தோம். அவர்கள் முன்னிலையிலும் மேற்படி எனது மகளை பார்க்க எதிரிகள் அனுமதிக்கவில்லை. என் மகளுக்கு குழந்தையை பிறந்திருந்த சமயத்தில் எதிரிகள் குழந்தையை வந்து பார்க்கவில்லை. என் மகள் மாசமாக இருப்பது பற்றி அவர்களுக்கு தெரியாது என்று எதிரிகள் கூறிவிட்டார்கள்.

5. குழந்தை பிறந்து 40 நாட்கள் கழித்து எதிரிகள் வந்து என் மகளையும் குந்தையும் அழைத்து சென்றார்கள். அதன்பின்னர் நானும் எனது கணவரும் குழந்தையை பார்ப்பதற்காக 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தபோது அவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. குழந்தை இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள்.

6. பொள்ளாச்சி ஜமாத்தில் மேற்படி விபரத்தை தெரிவித்தோம். அவர்கள் முன்னிலையிலும் எங்களை பார்க்க அனுமதிக்கவில்லை. இது சம்மந்தமாக நாங்கள் காவல் நிலையம் சென்று தெரிவித்தோம். போலீசார் எதிரிகளின் வீட்டிற்கு வந்தபோதும் அவர்கள் கதவை திறக்கவில்லை. எனவே போலீசார் ஒலிபெருக்கி மூலம் அழைத்து எதிரிகளின் வீட்டின் கதவை உடைத்து என் மகள் அசா 1யும் குழந்தையையும் மீட்டனர்.

7. பின்னர் குழந்தையையும் என் மகளையும் வீட்டிற்கு அழைத்து சென்றோம். இது சம்மந்தமாக என் மகள் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. என் மகளுக்கும் 1ம் எதிரிக்கும் இருவீட்டார் சம்மதத்துடன்தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தனரா என்று எனக்கு நினைவில்லை. எதிரிகள் வீடு பொள்ளாச்சியில் உள்ளது எதிரிகள் வீடடிற்கும் எனது வீட்டிற்கும் இடையே 40 கி.மீ தொலைவு உள்ளது என்றால் சரிதான்.

2. அசா 1 கூறிதான் சம்பவங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிரி தனது அக்காவும் மைத்துனரும் கூறுவதுபோல்தான் நடக்கவேண்டுமென்று அசா 1ஐ மிரட்டியதாக போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். 1ம் எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து அசா 1ஐ வாழ விடவில்லை என்று போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். திருமணத்திற்கு பிறகு எதிரிகள் வீட்டிற்கு என் மகளை பார்ப்பதற்காக 2 முறை சென்றுள்ளேன். எதிரிகள் என்னை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை வீட்டிற்கு வெளியே நின்று என் மகளை பார்த்துவிட்டு வந்துவிட்டேன். அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றாலும் என் மகளை எதிரிகளின் வீட்டில் வைத்து பலமுறை பார்த்து வந்தேன் என்றாலும் சரியல்ல.

3. என் மகளுக்கு குழந்தை பிறந்த சங்கதியை நாங்கள் எதிரிகளிடம கூறவில்லை என்றாலும் ஆனாலும் எதிரிகள் மேற்படி தகவல் தெரிந்த குழந்தையை பார்க்க வந்தனர் என்றாலும் சரியல்ல. குழந்தை பிறந்து 40 நாட்கள் கழித்து எதிரிகள் தாங்களாகவே அசா 1 வீட்டிற்கு அழைத்து சென்றனர் என்றால் சரிதான். எதிாகள் அசா 1 மீது எப்போதுமே பிரியாமாக இருந்தார்கள் என்றாலும் எனவேதான் அசா 1 ஐ தங்கள் வீட்டிற்கு தாங்களாகவே அழைத்து சென்றார்கள் என்றாலும் சரியல்ல.

4. நானும் என் கணவரும் எதிரிகள் வீட்டிற்கு குழந்தையை பார்க்கச்சென்றபோது குழந்தை இறந்துவிட்டதாக எதிரிகள் கூறியதாக என் போலீசார் விசாரணையில் நான்கூறியுள்ளேன். எதிரிகள் என் மகளை பார்க்கவிடவில்லை என்றும் இது குறித்துபொள்ளாச்சி ஜமாத்தில் முறையிட்டதாகவும் போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. ஆண் மற்றும் பெண் போலீசார் என் மகளை மீட்க வந்திருந்தனர் எந்த காவல் நிலைய போலீசார் என்று தெரியவில்லை.

5. போலீசார் ஒலிபெருக்கி மூலம் எதிரிகள் வீட்டின் முன்பு எதிரிகளுக்கு எச்சரிக்கை விடுத்தாகவும் பின்பு எதிரிகள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து அசா1 ஐயும குழந்தையையும் மீட்டதாக என் போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். அவ்வாறு நான் கூறுவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. எதிரிகள் வீட்டின் அருகில் நிறைய குடியிருப்புகள் உள்ளது என்றாலும் அசா 1ஐயும் குழந்தையையும் போலீசா மீட்டு எங்களிடம் ஒப்படைத்ததை அவர்கள் பார்த்தார்கள் என்றாலும் சரிதான். அசா 1 ஆரம்பத்தில் இருந்தே 1ம் எதிரியுடன் வாழ பிடிக்காமல் அவராகவே எதிரிகள் வீட்டில் இருந்து வெளியேறி என் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் அசா 1ஐ சிரமப்படுத்தவில்லை என்றாலும் கேள்விப்பட்ட சங்கதிகளை வைத்து சாட்சியமளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. மேற்படி பிரச்சனையை சுமூகமாக முடிக்க என் குடும்பத்தினர் மற்றும் வெளிநபர்கள் பைசல் பேசினார்கள். மேற்படி வெளிநபர்கள் யார் என்றால் எனக்கு தெரியாது. என் மகளுக்கு 1ம் எதிரி 3 முறை தலாக் நோட்டிஸ் அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி 3 தலாக் நோட்டிஸ்களையும் என் மகள் பெற்றுக்கொண்டார். மேற்படி தலாக் நோட்டிஸ்களுக்கு மறுப்பு கடிதம் எதுவும் என் மகள் அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. 1ம் எதிரிக்கும் என் மகளக்கும் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். இருவர் சம்மதத்துடன்தான் விவாகரத்து ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சீர்வரிசை பொருட்களை 1ம் எதிரியிடம் இருந்து பெற்றுக்கொண்டதாக அசா 1 கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் அசா 1 எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் பீரோ, கட்டில் ஆகியவற்றை பெற்றுக்கொண்டுள்ளோம்.

9. விவாகரத்திற்கு பிறகு அசா 1க்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை உள்ளது. 1ம் எதிரிக்கும் மறுமணம் ஆகியுள்ளது. அசா 1 எதிரிகள் குடும்பத்தில் வாழ்ந்த காலத்தில் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கோவை காவல் நிலையத்தில் எங்கள் குடும்பத்தார் புகார் கொடுத்தனர். புகார் கொடுப்தற்கு நான் செல்லவில்லை.

10. அசா 1 உடன் வாழ்ந்த காலத்தில் 1ம் எதிரி பெங்களூரில் வேலையில் இருந்தார். அசா 1 தான் 1ம் எதிரியுடன் வாழ பிடிக்காமல் தானாகவே எதிரிகள் வீட்டை விட்டு வெளியேறி எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றாலும் என் மகள் சொல்லிக்கொடுத்து தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரிகள் யாரும் எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும் அவர்களை பழி வாங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharnayan)
Judicial Magistrate No.I,
Pollachi.